# பத்திரிக்கை செய்தி

## வேலை வாங்கித் தருவதாக கூறி ரூ.40,000/- லஞ்சமாக பெற்ற முன்னாள் நீதிமன்ற அலுவலருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் அபராதம் ரூ.10,000/- விதித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு.

புகார்தாரர் குமார் என்பவர் சென்னை பெரம்பலூர், மங்களாபுரம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் வசித்து வந்தார். 2002ம் ஆண்டு வேலையில்லாமல் இருந்துள்ளார். தனக்கு வேலைக்காக தன்னுடைய நண்பர் சகாயராஜ் என்பவர் மூலமாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிமன்ற அலுவலராக வேலை செய்யும் திரு.மோகனகிருஷ்ணன் என்பவரை அணுகியுள்ளார். திரு.மோகனகிருஷ்ணன் தனக்கு தெரிந்த நீதிபதி மூலமாக வாட்ச்மேன் அல்லது துப்புரவு பணியாளராக வேலை வாங்கி தருவதாகவும் அதற்கு ரூ.40,000/- தனக்கு கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். அதன்பேரில் புகார்தாரர் 29.12.2002ம் தேதி ரூ.20,000/-ம் ஜனவரி 2003ம் ஆண்டு ரூ.18,000/- மற்றும் 07.08.2003ம் தேதி ரூ.2,000/-ம் ஆக மொத்தம் ரூ.40,000/- கொடுத்துள்ளார். திரு.மோகனகிருஷ்ணன் புகார்தாரருக்கு வேலை ஏதும் வாங்கி கொடுக்காத காரணத்தினால் புகார்தாரர் திரு.மோகன கிருஷ்ணன் மீது வழக்கறிஞர் மூலமாக உயர் நீதிமன்றத்தில் (Crl.O.P.No.25980/2004) மனுதாக்கல் செய்தார். இம்மனுவை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் இது தொடர்பாக விசாரணை செய்யுமாறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு உத்தரவு பிறப்பித்தது.

அதனடிப்படையில் 06.06.2005ம் தேதி ஊ.த.க.துறையால் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக விசாரணை செய்ததில் மேற்படி திரு.மோகனகிருஷ்ணன் ஏற்கனவே இது போல இரண்டு நபர்களிடம் வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றியதின் பேரில் அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 07.08.2003ந் தேதி முதல் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார் என்பது தெரியவந்தது. இது தொடர்பான வழக்கு ஊ.த.க.துறை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று 12.01.2015ம் தேதி எதிரி மீது குற்றம் நிருபிக்கப்படவில்லை என தீர்ப்பு வழங்கியது, அதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மூலம் வழக்கு மேல் முறையீடு செய்யப்பட்டு (C.A.352/2015, dated: 01.06.2015) வழக்கு நடைபெற்று வந்தது.

இவ்வழக்கில் இன்று (20.02.2023) குற்றவாளி திரு.மோகனகிருஷ்ணன் மீது குற்றம் நிருபிக்கப்பட்டு அவருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ரூ.10,000/- அபராதமும் விதித்து உயர் நீதிமன்ற நீதிபதியால் தீர்ப்பு வழங்கப்பட்டது. அபராதம் கட்ட தவறினால் மேலும் ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.